செ.வெ.எண்: 59 நாள்: 26.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் வேட்பாளர்களிடமிருந்து பெறப்படும் வேட்பு மனுக்களை அரசு அலுவலர்கள் முறையாக பூர்த்தி செய்து பெற வேண்டும் - மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் வேட்பு மனு தாக்கல் செய்யும் இடங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (26.09.2016) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறியதாவது:

தமிழகத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் தேதியினை தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி நமது மாவட்டத்தில் உள்ளாட்சி சாதாரண தேர்தல்கள் 17.10.2016 மற்றும் 19.10.2016 ஆகிய தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெறவுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வேட்பு மனு தாக்கல் இன்று (26.09.2016) முதல் நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊரகப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றது. இதில் திருமயம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள வேட்புமனு தாக்கல் பெறப்படும் இடங்கள் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. மேலும் அரிமளம் அரசினர் மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்படவுள்ள வாக்கு எண்ணும் மையம் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வில் திருமயம் மற்றும் அரிமளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களில் ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர், கிராம ஊராட்சித்தலைவர், மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் ஆகிய பதவிகளுக்கு போட்டியிடுபவர்களிடமிருந்து வேட்பு மனுக்கள் பெறும் இடம், விண்ணப்பம் வழங்கும் இடம், வாக்காளர் பட்டியல் விற்பனை செய்யுமிடம், வழங்கப்படும் விண்ணப்பங்கள் போன்ற பல்வேறு தகவல்கள் பார்வையிடப்பட்டது.

மேலும் வாக்காளர்களுக்கு அவர்கள் போட்டியிடக்கூடிய பதவிகளுக்கு உரிய விண்ணப்பத்தினை முறையாக வழங்கவும், வேட்பாளர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை சரியாக பூர்த்தி செய்து பெறவும், ஒவ்வொரு நாளும் பெறப்படும் விண்ணப்பத்தின் விபரத்தினை கணக்கிட்டு அதன் தகவல்களை தினமும் தெரிவிக்கவும், வாக்கு எண்ணும் மையத்தில் தடுப்பு கட்டைகளுடன் போதுமான பாதுகாப்பு ஏற்பாடு வசதிகள் செய்யவும் சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்றும் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் கூறினார்.

இந்த ஆய்வின் போது வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.ராஜ்குமார், திருமதி.மணிமேகலை மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**